# இன்றைய இறைவார்த்தை

# 16–05–2015

**பாஸ்கா – 6ஆம் வாரம் – சனி**

**முதல் வாசகம்:**

"இயேசுவே மெசியா" என அப்பொல்லோ மறைநூல்களின் மூலம் எடுத்துக்காட்டினார்.

**திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்: 18 : 23 – 28**

பவுல் சிறிது காலம் அந்தியோக்கியாவில் செலவிட்டபின் அங்கிருந்து புறப்பட்டு ஒன்றன்பின் ஒன்றாகக் கலாத்தியா, பிரிகியாப் பகுதிகள் வழியாகச் சென்று சீடர்கள் அனைவரையும் உறுதிப்படுத்தினார். அலக்சாந்திரியாவில் பிறந்த அப்பொல்லோ எனும் பெயருடைய யூதர் ஒருவர் எபேசு வந்தடைந்தார். அவர் சொல்வன்மை மிக்கவர். மறைநூல்களில் புலமை வாய்ந்தவர். ஆண்டவரின் நெறிகளைக் கற்றறிந்தவர். ஆர்வம்மிக்க உள்ளத்தோடு இயேசுவைப் பற்றிய செய்தியைப் பிழையற அறிவித்தும் கற்பித்தும் வந்தார்.

ஆனால் அவர் யோவான் கொடுத்த திருமுழுக்கை மட்டுமே அறிந்திருந்தார். அவர் தொழுகைக்கூடத்தில் துணிவுடன் பேசத் தொடங்கினார். அவர் பேசியதைக் கேட்ட பிரிஸ்கில்லாவும் அக்கில்லாவும் அவரை அழைத்துக் கொண்டுபோய், கடவுளின் நெறியைத் திட்டவட்டமாக விளக்கினர். அவர் அக்காயாவுக்குப் போக விரும்பியபோது சகோதரர் சகோதரிகள் அவரை ஊக்கப்படுத்தி, அவரை ஏற்றுக்கொள்ளுமாறு சீடருக்குக் கடிதம் எழுதினார்கள். அவர் அங்கே சென்றபோது இறையருளால் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டிருந்தவர்களுக்குப் பெரிதும் துணையாய் இருந்தார். ஏனெனில் அவர் வெளிப்படையாகவும் சிறப்பாகவும் யூதர்களிடம் வாதாடி, "இயேசுவே மெசியா" என மறைநூல்களின்மூலம் எடுத்துக் காட்டினார்.

**இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.**
**இறைவா! உமக்கு நன்றி.**

**பதிலுரைப்பாடல்:**

**திருப்பாடல்கள்: 47 : 1 – 2, 7 – 8, 9 (பல்லவி: 7a)**
**பல்லவி: கடவுளே, அனைத்து உலகின் வேந்தர் நீரே.**
**அல்லது: அல்லேலூயா.**

1. மக்களினங்களே, களிப்புடன் கைகொட்டுங்கள். ஆர்ப்பரித்துக் கடவுளைப் புகழ்ந்து பாடுங்கள். ஏனெனில், உன்னதராகிய ஆண்டவர் அஞ்சுதற்கு உரியவர். உலகனைத்தையும் ஆளும் மாவேந்தர் அவரே. பல்லவி

2. ஏனெனில், கடவுளே அனைத்து உலகின் வேந்தர். அருட்பா தொடுத்துப் புகழ் பாடுங்கள். கடவுள் பிற இனத்தார்மீது ஆட்சி செய்கின்றார். அவர்தம் திரு அரியணையில் வீற்றிருக்கின்றார். பல்லவி

3. மக்களினங்களின் தலைவர்கள் ஆபிரகாமின் கடவுளுடைய மக்களோடு ஒன்று கூடுவர். ஏனெனில், மண்ணுலகின் மன்னர் அனைவரும் கடவுளின் கொற்றத்திற்கு உட்பட்டவர். கடவுளே அனைத்திற்கும் மேலானவர். பல்லவி

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி: யோவான் 16 : 28**

அல்லேலூயா, அல்லேலூயா! நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம்:**

தந்தையே உங்கள்மீது அன்புகொண்டுள்ளார்.
நீங்கள் என்மீது அன்புகொண்டு, நம்பினீர்கள்.

**யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்: 16 : 23 – 28**

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியது: “நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இதுவரை நீங்கள் என் பெயரால் எதையும் கேட்டதில்லை. கேளுங்கள். பெற்றுக் கொள்வீர்கள். அப்போது உங்கள் மகிழ்ச்சியும் நிறைவடையும். நான் உங்களிடம் உருவகமாகவே பேசி வந்துள்ளேன். ஆனால் காலம் வருகிறது. அப்போது உருவகங்கள் வாயிலாய்ப் பேசாமல், தந்தையைப் பற்றி வெளிப்படையாய் எடுத்துரைப்பேன். அந்நாளில் நீங்கள் என் பெயரால் வேண்டுவீர்கள். அப்போது “உங்களுக்காகத் தந்தையிடம் கேட்கிறேன்” என நான் சொல்ல மாட்டேன். ஏனெனில் தந்தையே உங்கள்மீது அன்பு கொண்டுள்ளார். நீங்கள் என்மீது அன்பு கொண்டு, நான் கடவுளிடமிருந்து வந்தேன் என்று நம்புவதால்தான் தந்தையும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளார். நான் தந்தையிடமிருந்து உலகிற்கு வந்தேன். இப்போது உலகை விட்டுத் தந்தையிடம் செல்கிறேன்.”

**இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.**
**கிறிஸ்துவே! உமக்குப் புகழ்.**

# இன்றைய இறைவார்த்தை

# 16–05–2015

**சிந்தனைக்கு:**

இயேசுவின் திருப்பெயருக்கு உள்ள ஆற்றலையும், பெருமையையும் இன்றைய நற்செய்தி வாசகத்தின் மூலம் அறிகிறோம். அதிலும், இயேசுவின் வாய்மொழி வழியே அறிய வருகிறோம். ‘‘நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதை எல்லாம் அவர் உங்களுக்குத் தருவார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்’’ என்று வாக்களிக்கிறார் இயேசு. மேலும் ‘‘அந்நாளில் நீங்கள் என் பெயரால் வேண்டுவீர்கள்’’ என்றும் இயேசு முன் அறிவித்துள்ளார்.

உலகில் உள்ள அனைத்துப் பெயர்களிலும் மேலான பெயர் கிறிஸ்து இயேசுவின் திருப்பெயர்தான் (காண்க : பிலிப்பியர் 2 : 6 – 11). அந்தப் பெயருக்குத்தான் விண்ணவர், மண்ணவர், கீழுலகோர் அனைவரும் மண்டியிடுவர். அந்தப் பெயரைக் கேட்டுத்தான் அலகைகள் அலறி அடித்துக் கொண்டு ஓடுகின்றன. அந்தப் பெயரால்தான் நோயாளர்கள் நலம் பெறுகின்றனர். அந்தப் பெயரில்தான் தந்தை இறைவன் பெருமை அடைகின்றார். ஆம், இத்தனை பெருமைகள் நிறைந்த இயேசுவின் திருப்பெயரை நாம் நாள்தோறும் அறிக்கையிட்டு, அவரது பெயரால் இறைத் தந்தையிடம் வேண்டுதல் செய்வோமாக! இனிது வாழ்வோம். வாழ்த்துக்கள். ஆசீர்.

**********